**செய்தி வெளியீடு எண்.5/2021** **நாள்: 11.03.2021**

**பொது மக்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு**

கழிவு நீர்த் தொட்டி மற்றும் பாதாள சாக்கடையை பாதுகாப்பற்ற முறையிலும், உரிய கவசங்கள் அணியாமலும் சுத்தம் செய்தல் மற்றும் மனித நுழைவு வாயிலில் அனுமதியின்றி நுழைவது குறித்த புகார்களுக்காக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்ட "சஃபாய் மித்ரா சுரக்ஷா சேலஞ்'' திட்டத்தின் கீழ் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தேசிய உதவி எண். "**14420**" சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் 24X7 அடிப்படையில் இயங்கி வருகிறது. பொது மக்கள் தங்கள் வீடு மற்றும் பொது இடங்களில் ஏற்படும் கழிவுநீர் அடைப்பை சரி செய்யும் போது, பாதுகாப்பற்ற முறையிலும், உரிய கவசங்கள் அணியாமலும் சுத்தம் செய்தல் மற்றும் மனித நுழைவு வாயிலில் அனுமதியின்றி நுழைவது குறித்த புகார்களை தேசிய உதவி எண். "**14420**" என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இவ்வாறான பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடும் போது பணியாளர்கள் விஷவாயு தாக்கி இறக்க நேரிடும் நிலை ஏற்படுகிறது. அவ்வாறு இறக்கும் போது, இப்பணியில் ஈடுபடுத்திய வீட்டு உரிமையாளர்கள்/ஒப்பந்ததாரர்கள் மீது தடை செய்யப்பட்ட மனித கழிவுகளை அகற்றும் பணியாளர்களின் மறுவாழ்வுச் சட்டம்– 2013ன் படி குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்